# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

**Online Newspaper in Tamil** **Vol.10** **30.10.2012**


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (71)

**71. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களை தமது கொலை வெறிக்குப் பயன்படுத்திய புலிகள்!**

புலிகளின் வரணி வதை முகாமில் தான் மிகவும் பயங்கரமான சித்திரவதை முறைகள் இருப்பதாக அங்கிருந்து எமது சிறைக்கு அழைத்து வருபவர்கள் மூலமாகக் கேள்விப்பட்டேன். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் தனித்தனியாகவே வைக்கப்பட்டிருப்பர். அவர்கள் பெரும்பாலும் நிர்வாணமாகவோ அல்லது வெறும் உள் உடுப்புடனோ தான் வைக்கப்பட்டிருப்பது வழமை. ஏனெனில் சாரம் போன்ற உடைகளை அணியக் கொடுத்தால், அங்கு நடைபெறும் சித்திரவதையைத் தாங்க முடியாமல், அந்த சாரத்தைக் கிழித்து கழுத்தில் சுருக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொள்வார்கள் என்ற பயம் புலிகளுக்கு.

பிறவிகளில் பெரும் பிறவியான ஒரு மனித உயிர் தன்னை மாய்த்துக் கொள்வதில், புலிகளுக்கு எவ்வித கவலையும் கிடையாது. இன்னும் சொல்லப்போனால், புலிகளுக்கு ஒரு துப்பாக்கிக் குண்டு லாபம். ஆனால் விசாரணைக் கைதியாக இருக்கும் ஒருவர் தற்கொலை செய்து கொண்டால், அவரிடமிருந்து 'கறக்க' வேண்டிய விடயங்களைக் கறக்க முடியாமல் போய் விடுமே என்ற கவலை காரணமாக, கைதிகள் தம்மைத்தாமே மாய்த்துக் கொள்வதை அனுமதிக்கமாட்டார்கள்.

வரணி முகாமில் கைதிகளை தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, அவர்களை தாக்குவதற்கான வசதிகளைப் புலிகள் செய்திருந்தார்கள். கப்பி மூலம் தொங்கும் கயிறுகளில் கைதிகள் கட்டித் தொங்கவிடப்படுவர். அவர் தலைகீழாகத் தொங்கியபடி இருக்கையில,; சுற்றிவர புலிகள் நின்றுகொண்டு தடிகளால் அல்லது இரும்புக் கம்பிகளால் அவர்களது பிட்டம், கைகால்கள் என்பன மீது தாக்குவர்.

வரணி முகாமில் கைதிகளை விசாரிப்பதற்கும், சித்திரவதை செய்வதற்கும் என விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட விசாரணையாளர்களைப் புலிகள் வைத்திருந்தனர். பின்னர் எமது ஆனைக்கோட்டை முகாமில் விசாரணையாளர்களாக இருந்த பெரிய சங்கிலி, சின்னச்சங்கிலி போன்றவர்கள், முன்னர் வரணி 'இறைச்சிக் கடை'யில் செயல்பட்டவர்கள் தான். அவர்கள் கைதிகளுக்குச் செய்த அளவு கணக்கில்லாத வதைகள் காரணமாக, காந்தியே அவர்களை ஆனைக்கோட்டைக்கு தன் முன்னிலைக்கு மாற்றியதாக அறிந்தேன்.

இன்னொரு சுவாரசியமான விடயம், இந்த விசாரணையாளர்களில் பலர் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள். இந்த இளைஞர்கள் கைதிகளை மோசமாகச் சித்திரவதை செய்கிறார்கள் என்ற ஒரு கருத்தும் அங்கு இருந்தது. இதை நான் இ;கு எந்தத் தவறான நோக்கத்துடனும் எழுதவில்லை. அதேபோல பெண் புலிகளும் பெண் கைதிகளுடன் மிகவும் மோசமாக நடந்து கொள்வதான ஒரு கருத்தும் இருக்கிறது. அதற்கான காரணங்கள் என்ன என்பதை நான் சில சக கைதிகளுடன் விவாதித்தேன். அவர்களுள் ஒருவர் 'தீப்பொறி' இயக்கத் தோழர் நோபேர்ட்.

உளவியல் ரீதியான காரணங்களே அதற்குக் காரணம் எனவும், அதைப் புலிகள் நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்துவதாகவும் 'தீப்பொறி' இயக்கத் தோழர் நோபேர்ட் என்னிடம் கூறினார். அதற்கான காரணங்களையும் அவர் என்னிடம் விளக்கினார்.

எமது சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களும், பெண்களும் நீண்ட காலமாக மிகவும் அடக்கியொடுக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள். எமது சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்தவொரு சமூக விடயங்களிலும் முன்னணியில் நின்று செயற்பட முடியாது. அந்தளவுக்கு இல்லாவிடினும், தமிழ் சமூகத்தில் பெண்களும் கூட முக்கிய பங்குகளை வகிக்க முடியாத நிலைமை மிக நீண்டகாலமாக இருந்து வந்தது.

உதாரணமாக, தமிழ் சமூகத்தில் தனது கணவர் அ.அமிர்தலிங்கம் அவர்களுடன் இணைந்து தமிழரசுக் கட்சி மேடைகளில் பகிரங்கமாக பேசியும் பாடியும் வந்தவர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம். அவரது அரசியலை விமர்சிப்பதை விட, அவர் ஒரு பெண் என்பதற்காக அவரைத் தனிப்பட்ட முறையில் கேவலமாக பகிரங்க மேடைகளில் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் அவதூறு செய்வது ஒரு வழமையாக நீண்டகாலம் இருந்து வந்தது. அந்த அவதூறுப் பிரச்சாரத்தில் முன்னணியில் நின்றவர், பிற்காலத்தில் அமிர்தலிங்கத்துடனும் அவரது மனைவியுடனும் இரண்டறக் கலந்து அரசியல் செய்த, தமிழ் காங்கிரஸ் கட்சியியைச் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் மு.சிவசிதம்பரம்.

தமிழ் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்த இந்த இரு தரப்பினருக்கும் புலிகள் இயக்கம் தனது இயக்கத்தில் ஓரளவு வாய்ப்பு வழங்கியது. (பயன்படுத்தியது) புலிகள் தங்களது படையணிகளில் பெண்களையும் கணிசமான அளவு இணைத்ததுடன், பெண்களுக்கென தனியாக 'சுதந்திரப் பறவைகள்' என்ற அமைப்பையும் உருவாக்கி நடாத்தினர். அதில் இணைந்த பெண்கள் புதிய அதிகாரங்களைப் பெற்றவர்களாக, சமூகத்தில் தாமாகவே முன்வந்து செயல்படத் தொடங்கினர்.

அதேபோல, தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களும் புலிகள் இயக்கத்துடன் இணைந்ததின் மூலம் புதிய சக்தி பெற்றவர்களாக மாறினர். புலிகள் உண்மையில் தமிழ் சமூகத்தில் தீண்டாமைக்கு எதிராகவோ அல்லது சாதி அமைப்புக்கு எதிராகவோ எவ்வித போராட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. ஆனால் தமது இயக்கத்தில் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களை 'புலிகள்' என்ற புதிய சாதிப் பிரிவினராகக் கணித்து சமமாக நடத்தினர். அதேவேளையில் புலிகள் இயக்கத்தில் உயர் நிலையில் இருந்த யாழ்ப்பாணிய வெள்ளாள உயர்சாதி சமூகத்தைச் சேர்ந்தவர்கள், மிக நுட்பமான முறையில் தமது இயக்கத்துக்கு உள்ளேயே சாதிப் பாகுபாட்டையும் பேணி வந்தனர்.

சமூகத்தில் நீண்டகாலம் அடக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள் என்ற வகையில் இந்தப் பெண்களும், தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் புலிகள் இயக்கத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தை தமது எதிரிகள் (மாற்று இயக்கத்தவர்கள்) மீது பிரயோகிப்பதற்கு ஆவலாக இருப்பதும், அதை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி மகிழ்ச்சி அடைவதும் ஒர் உளவியல் ரீதியான நோய் என்பதுதான் தோழர் நோபேர்ட் முன்வைத்த விளக்கம்.

ஒர் உதாரணத்தை இங்கு கூறலாம். என்னுடன் புலிகளின் ஆனைக்கோட்டை வதை முகாமில் கரவெட்டியைச் சேர்ந்த தோழர் ஒருவரும் அடைக்கட்டிருந்தார். நானும் தோழர் நா.யோகேந்திரநாதனும் 1960களின் பிற்பகுதியில் கிளிநொச்சிப் பகுதியில் புதிதாக புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைகளை ஆரம்பித்த போது, புதிதாக கட்சிக்கு முழுநேர ஊழியர்களைத் திரட்டும் திட்டமொன்றை செயற்படுத்தினோம். அந்த நேரத்தில் கரவெட்டியிலுள்ள உயர்சாதி சமூகமொன்றைச் சேர்ந்த இந்தத் தோழர் தாமாகவே முன்வந்து எம்மடன் இணைந்ததுடன், கூலி விவசாயிகள் நிறைந்த தருமபுரம் பகுதியில் கட்சிப் பொறுப்புகளையும் ஏற்றுத் திறம்படச் செயற்பட்டார். புதிதாக எம்முடன் இணைபவர்களுக்கு


முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழுமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN





Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

| |
|---|
| BBC |
| Newsnow |

அக்கிராயன் - கோணாவில் பகுதியில் நாம் வைத்திருந்த பண்ணையில் அமைந்திருந்த எமது முகாமில் அரசியல் பயிற்சி வழங்குவது வழமை. இந்தத் தோழரும் அங்கு பயிற்சி பெற்ற ஒருவராவார்.

இதில் இன்னொரு சுவாரசியமான விடயமென்னவெனில், இந்தத் தோழரின் தகப்பனார் ஒர் அரசாங்க உத்தியோகத்தர் (விவசாயக் கண்காணிப்பாளர்). அதேவேளையில் அவர் ஒரு அர்ப்பணிப்புள்ள கம்யூனிஸ்ட். பொதுவாக யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒருவர் தான் அரசியலில் ஈடுபட்டாலும் பிள்ளைகளை அதில் ஈடுபட விடமாட்டார். ஆனால் எமது இளம் தோழர் குடும்பத்தில் மூத்த ஆண் மகனாக, அந்தக் குடும்பத்தின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த போதும், தன் மகன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்ததையிட்டு அவரது கம்யூனிஸ்ட் தகப்பனார் உவகை அடைந்தாரேயொழிய, கவலையோ ஆத்திரமோ அடையவில்லை.

அதுமட்டுமல்ல, அந்த இளம் தோழர் எமது கோணாவில் முகாமில் அரசியல் பயிற்சி பெற்ற வேளையில், முல்லைத்தீவுப் பகுதியில் அரச கடமையில் இருந்த அவரது தகப்பனார், அங்கு கட்சி வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்த தோழர் இ.வே.துரைரத்தினம் அவர்களுக்குப் பல வகைகளிலும் உதவியதுடன், தனது மகனையும் உற்சாகப்படுத்தி கடிதங்கள் எழுதுவார். அதாவது ஒரு கம்யூனிஸ்ட் எப்படி வாழ வேண்டும், எவ்வாறு மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அவர் தனது மகனுக்கு எழுதும் கடிதங்கள் அமைந்திருக்கும். அவர் எழுதும் கடிதங்கள் எமது முகாமில் ஆதர்சக் கடிதங்களாக வாசிக்கப்படுவதுண்டு.

இடதுசாரிப் பாரம்பரியத்துக்கும், அதேவேளையில் சாதித் தடிப்புக்கும் பெயர்போன கரவெட்டிக் கிராமத்தில், இந்தக் கம்யூனிஸ்ட் குடும்பத்தில் தந்தை - மகன் உறவு ஒரு புதிய சமுதாயத்தின் - சோசலிச சமூக அமைப்பின் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

இந்தத் தோழர் பின்னர் எம்முடன் சேர்த்து புலிகளால் கைது செய்யப்பட்டு வதை முகாமில் வைக்கப்பட்டிருந்த போது, அவரை விசாரித்த புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவனும் கரவெட்டியைச் சேர்ந்தவன் தான். ஆனால் அந்த இளைஞன் தாழ்த்தப்பட்ட சமூகம் ஒன்றைச் சேர்ந்தவன். எமது தோழர் கரவெட்டியையந் சேர்ந்தவர் என்பதை அறிந்த அந்தப் பலி விசாரணையாளன், கரவெட்டியில் எமது தோழா எந்தக் குறிச்சியைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டு, இவர் உயர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிந்து கொண்டான்.

எமது தோழரின் அரசியல் பின்னணியையோ, அவர் 1960களில் எமது கட்சி வட பகுதியெங்கும் தீவிரமாக முன்னெடுத்த தீண்டாமைக்கு எதிரான எழுச்சி மிகு போராட்டத்தில் அவர் வகித்த பங்கையோ அறியாத அந்தப் புலி உறுப்பினன், எமது தோழர் உயர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக மிகவும் மோசமான சித்திரவதைகளை அவர் மீது மேற்கொண்டான்.

இன்னுமொரு உதாரணத்தையும் இங்கு கூறலாம். சசிதரன் என்றொரு இன்னுமொரு புலி இளைஞன் எமது முகாமில் இருந்தான். அவன் பொறுப்பாளன் காந்தியின் பெரும் விசுவாசி. காந்தி யாருக்காவது அடிக்கப் போகிறான் என அறிந்து கொண்டால், நல்ல காய்ந்த பூவரசம் கொட்டன்களைக் கொண்டோடி வந்து கொடுப்பவன் இவன்தான். பல தடவைகள் காந்தி என்னை அடித்த போதெல்லாம் தடி எடுத்துக் கொடுத்தவன் இவன்தான். எப்பொழுதும் வேட்டை நாய் போல காந்தியைச் சுற்றி சுற்றி வருவான். இந்த இளைஞனும் சங்கானை நிச்சாமம் பகுதியியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட ஒரு இளைஞன்.

இவனது ஒன்றுவிட்ட அண்ணனான சந்திரன் என்ற சங்கானையைச் சேர்ந்த தோழர் ஒருவரும் கைது செய்யப்பட்டு எம்முடன் வைக்கப்பட்டிருந்தார். அண்ணன் என்ற வகையில் இந்த சசிதரனால் அவருக்கு எதுவும் உதவ முடியவில்லை.

நான் ஆனைக்கோட்டை வதை முகாமில் எனது ஆறு மாத தடுப்புக்காவல் விசாரணைக் காலத்தை முடித்துக்கொண்டு, மிகுதி ஒரு வருட தண்டனைக் காலத்தை அனுபவிப்பதற்காக நாவற்குழி - கோவிலாக்கண்டி திறந்வெளி சிறைச்சாகை;கு அனுப்பப்பட்டு அங்கிருந்த போது, ஒருநாள் அங்கு வந்த சசிதரன் என்னைத் தனியாகச் சந்தித்துக் கதைத்தான். அப்பொழுது அவன் இன்னொரு சசிதரனாக - உண்மை உருவமாக என்னிடம் தோன்றினான்.

தங்களைப் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எமது கட்சி பல தியாகங்களுக்கூடாகப் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்ததை அறிந்திருந்த அவன், தான் புலிகள் இயக்கத்தில் இணைந்தது குறித்தும் தனது செயற்பாடுகள் குறித்தும் என்னிடம் கவலை தெரிவித்தான். தனது சகோதரனையே தனக்கு முன்னால் புலிகள் தாக்கும் போது, தான் ஒன்றும் செய்ய முடியாது கையறு நிலையில் இருந்ததை எண்ணிக் கவலைப்பட்டான். அவன் உண்மையில் தான் அவ்வாறு கதைக்கிறானா என்பதில் எனக்குச் சந்தேகம் இருந்தாலும், நான் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

தனக்கும் மனிதாபிமானம் இருக்கிறது என்பதைக் காட்ட அவன் ஒரு சம்பவத்தைச் சொன்னான். செல்வி, தில்லை என்பவர்களுடன் கைதுசெய்யப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் மனோகரனை ஒருமுறை காந்தி கடுமையாகச் சித்திரவதை செய்ய எண்ணி, ஒரு இரவு முழுவதும் சிறையின் வெளி வராந்தாவில் நிற்க வைத்து சங்கிலிகளால் பிணைத்திருந்ததாகவும், அவருக்குத் தான் தான் காவலுக்கு இருந்ததாகவும் கூறினான்.

மனோகரன் நீண்ட நேரம் தொடர்ந்து நிற்க முடியாமல் பல தடவைகள் துவண்டு விழுந்ததாகவும், ஆனால் கீழே விழுந்துவிட முடியாமல் அவரைப் பிணைத்திருந்த சங்கிலிகள் தடுத்ததாகவும் சசிதரன் கூறினான். அவரது நிலையைக் கண்டு மனம் வருந்திய தான், அங்கு எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் கைவிளக்கை காற்று அணைத்தது போல அணைத்து விட்டு, அவரது சங்கிலியைத் தளர்த்திப் பல தடவைகள் அவரைக் குந்தி இருக்க விட்டதாகச் சொன்னான்.

சசிதரன் சொன்ன தகவல் உண்மைதானா என்பதை அறிந்து கொள்ள மனோகரனுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் இருந்ததுடன், அவன் இந்தத் தகவலைச் சொன்ன நேரத்தில், நான் அறிந்த வகையில் மனோகரன் உட்பட செல்வி, தில்லை போன்ற எல்லோரதும் 'கதைகளைப்' புலிகள் முடித்து விட்டிருந்தார்கள்.

தொடரும்

முன்னைய பதிவுகள்